தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
18.10.2024 (வெள்ளிக்கிழமை)



உலக உடல் காய தினம்:

# விழிப்புணர்வு வேகநடை போட்டி

புதுச்சேரி, அக். 18-
உலக உடல் காய தினம் நேற்று கடைபிடிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு புதுச்சேரி போக்குவரத்து காவல் துறை, ஜிப்மர் மருத்துவமனை சார்பில் விழிப்புணர்வு வேக நடை போட்டி நேற்று நடந்தது. கடற்கரை சாலையில் காந்தி திடல் அருகில் இருந்து தொடங்கிய இந்த போட்டியை போக்குவரத்து போலீஸ் சூப்பிரண்டு செல்வம், ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன், டாக்டர் சங்கரேஸ்வரி ஆகியோர் கொடி அசைத்து தொடங்கி வைத்தனர்.

இதில் இளைஞர்கள், இளம் பெண்கள், பொதுமக்கள் என 250-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்த வேகநடை போட்டி அஜந்தா சந்திப்பு, ராஜா தியேட்டர் சந்திப்பு, அண்ணா சிலை, பழைய கோர்ட்டு வளாகம் வழியாக கடற்கரை காலை காந்தி திடல் பகுதியில் முடிவடைந்தது. இதில் முதல் 3 இடங்களை பிடித்த கிருஷ்ண மூர்த்தி, கருணாகரன், சந்துரு ஆகியோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.